**<u>முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்</u>**

<u>O.S. No. 334/2022</u>

**<u>Witness PW 2</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெயா | தொழில் | |
| க/பெ | பரமசிவம் | வயது | |
| ஊர் | | தேதி | 25.07.2025 |
| மாவட்டம்; | | | |

இன்று (25.07.2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எனது சொந்த ஊர் அய்யூர் அகரம் . எனது கணவரின் ஊர் திருவெண்ணெய்நல்லூர் அருகில் உள்ள ஏமப்பூர். எனக்கு திருமணம் முடிந்து 40 வருடமாகின்றது. இந்த ஊருக்கு வந்து 40 ஆகின்றது. எந்த வருடம் என்று எனக்கு நியாபகம் இல்லை . மகேஷ் என்பவர் எனது தாத்தா சாமிக்கண்ணு என்பவரது பங்காளி . சாமிக்கண்ணு என்பவர் எனது கணவர் , பரமசிவம் என்பவர் இறந்துவிட்டதால் அவரது பேரன்களான செல்வகுமார் , செல்வராஜ் ஆகியோர் பெயரில் சொத்தினை தான செட்டில்மெண்ட் வாயிலாக எழுதி வைத்துள்ளார் . எனக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மன் எதுவும் வரவில்லை மகேஷ் என்பவர் அழைத்து வந்தார். இந்த வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் மகேஷ் என்பவர் தாக்கல் செய்துள்ளார் . மகேஷ் என்பவர் குணசேகரன் என்பவர் பெயரில் வழக்கை தாக்கல் செய்துள்ளார். வேறு யார் யார் பெயரில் வழக்குக தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்குதெரியாது. எதற்காக போட்டுள்ளார் என்று தெரியுமாஎன்றால் சொத்துக்காக

போட்டுள்ளார். என்ன சொத்து என்றால் வீட்டு மனை . சர்வே எண். மற்றும் விஸ்திரணம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது . வழக்கு சொத்து வாழை மரம் , முருங்கை மரம், செம்பருத்தி, கத்திரி மற்றும் பாத்ரூம் ஆகியவை உள்ளது . நான் பிள்ளையார் கோவில் தெருவில் வசித்து வருகிறேன் . தாவா சொத்து பிள்ளையார் கோவில் தெருவில் உள்ளது . எவ்வளவு தூரம் என்றால் மேற்கு பக்கத்தில் சுமார் 10 வீடுகள் தள்ளி இருக்கும் . வாதிக்கு வடக்கில் வீட்டு மனை உள்ளது . கிழக்கில் குப்புசாமி மேற்கில் பூங்காவனம் , வடக்கில் பிள்ளையார் கோவில் தெரு , தெற்கில் மாரியம்மன் கோவில் ஊறல் வாய்க்கால் , வழக்கு சொத்திற்கு கிழக்கில் கேசவ கவுண்டர் மனை இல்லை என்று சொன்னால் சரி . வழக்கு சொத்திற்கு அடுத்து வடக்கே மாரியம்மன் கோவில் தெரு இல்லை என்றால் சரி ஊறல் வாய்க்கால் தான் உள்ளது . மகேஷ் என்பவருக்கு சொத்து எவ்வாறு கிடைத்தது என்றால் புனிதா என்பவரிடம் இருந்து வாங்கினார். 2008 ம் வருடம் வாங்கினார். சாட்சி மீண்டும் 2020 ல் வாங்கினார் என்று சாட்சியம் அளிக்கிறார் . தேதி மற்றும் மாதம் தெரியாது . கிரையம் வாங்கியது நேரடியாக எனக்கு தெரியும். சாட்சி கையொப்பம் போடவில்லை பணம் வாங்கிய விவரம் எனக்கு தெரியும் . 20000 ரூபாய் கொடுத்தார்கள் அதன்பிறகு சிறுக சிறுக கொடுத்தார்கள் அதற்கு பின் எவ்வளவு கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது . எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் வாங்கினார்கள் என்று எனக்குதெரியாது என்றால்சரி . புனிதா என்பவரது கிரைய பத்திரத்தில் என்ன வாசகம் உள்ளது என்ற விவரம் எனக்குதெரியுமா என்றால் தான செட்டில்மெண்ட் என்று மகேஷ் சொல்லியதின் பேரில் தெரியும் நேரடியாக தெரியாது என்றால் சரி . புனிதா என்பவரது செட்டில்மெண்ட் பத்திரம் மற்றும் மகேஷ் என்பவரது கிரையம் பத்திரம் பற்றி எனக்கு சொல்லியதன் பேரில் தான் தெரியும் என்றால் சரி . மகேஷ் என்பவரது பத்திரத்தில் உள்ளவிவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி.புனிதா என்பவருக்கு உள்ள சொத்து எனக்கு நேரடியாக தெரியாது

என்றால் தெரியும். சுப்ரமணி என்பவரது சொத்து . சுப்ரமணி என்பவருக்கு சொந்தமான சொத்து எவ்வளவு என்று எனக்கு தெரியாது . சுப்ரமணி என்பவருக்கு எப்படி சொத்து கிடைத்தது என்று எனக்கு தெரியாது என்றால் அவர் அப்பா கொடுத்ததாக கூறினார் அவரது அப்பா எவ்வளவு நிலம் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரி . நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் பாக பத்திரம் பற்றி கூறவில்லை . சுப்ரமணி என்பவருடன் பிறந்தவர்கள் எத்தனை ஆண் மற்றும் எத்தனை பெண் என்று சொன்னால் 1 பெண் மற்றும் இரண்டு ஆண் பிள்ளைகள் . அவர்கள் பெயர் என்ன என்று எனக்கு தெரியாது. சுப்ரமணி என்பவருக்கு சகோதரிகள் யாராவது இருக்கிறார்களா என்றால் தெரியும் அவர் உத்திரப்பாளையத்தில் இருக்கிறார் . அவரது பெயர் எனக்கு தெரியாது . இந்த வழக்கு தவிர இந்த சொத்து சம்மந்தமான வேறு வழக்குகள் ஏதேனும் உள்ளதா என்றால் அது எனக்கு தெரியாது . இவ்வழக்கு சொத்து சட்டப்படி யாருக்குசொந்தமானது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சுப்ரமணி என்பவருக்கு உரிமையான சொத்துஅவரிடம் இருந்து புனிதாஎன்பவருக்கு கிடைத்து மகேஷ் என்பவர் கிரையம் வாங்கினார் சுப்ரமணி என்பவருக்கு முன்னர் யாருக்கு உரிமையானது என்று சொன்னால் அது எனக்கு தெரியவில்லை. சுப்ரமணி என்பவருக்கு அடுத்து வேறு யாருக்காவது சொத்து பாத்தியமா என்பதும் எனக்கு தெரியாது . பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் புனிதா என்பவரது பெயரில் இருந்தது . அதனை நான் பார்த்துள்ளேனா என்றால் என்னிடம் சொல்லியுள்ளார்கள். எனக்கு எழுத படிக்க தெரியும் நான் நேரடியாக பட்டாவை பார்க்கவில்லை. பிரதிவாதிகளின் பெயர் குணசேகரன் மற்றும் சிவகாமி . சுப்ரமணி என்பவரது தம்பி பிள்ளை தான் 3 ம் பிரதிவாதி. 1வது பிரதிவாதி 3 ம் பிரதிவாதியின் தாயார் . சொத்தானது குணசேகரன் , 1ம் பிரதிவாதி சிவகாமி , செல்வி, பாக்கியலஷ்மி, ஆகியோருக்கு உரிமையான சொத்துக்கள் என்றாலும் நான் மகேஷ் என்பவருக்கு

உரிமையானது என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பட்டா எவ்வளவு விஸ்திரணத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது . புனிதா, புஷ்பா ஆகியோருக்கு எந்த வித உரிமையும் இல்லாமல் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அவரது அப்பா தான் சொத்தை அவர்களுக்கு எழுதி வைத்தார்கள் . உரிய ஆவணம் இல்லாமல் பட்டா வழங்கப்பட்டது செல்லத்தக்கதுஅல்ல என்று சொன்னால் சரியல்ல. சொத்து சம்மந்தமாக எந்தவித சங்கதியும் தெரியாமல் வாதி சொல்லிகொடுத்ததின் பேரில் சாட்சியம் அ ளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல . சுப்ரமணி என்பவருக்கு எவ்வாறு சொத்து உரியையானது என்று சொன்னால் அவரது அப்பா பாவாடை என்பவருக்கு உரிமைனயாது பாவாடை என்பவரது பெயரில் உள்ள பத்திரமோ அல்லது பட்டாவையோ நான் பார்க்கவில்லை . எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சொல்லிக்கொடுத்ததின் பேரில் வாதிக்கு அனுசரணையாக தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)

I Additional Subordinate Judge,
Villupuram